நாள்: 15 .03.24

அனுப்புதல்
திருமதி. C. கிருபா,
ஊராட்சி மன்ற தலைவர்,
பாரியூர் ஊராட்சி,
கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியம்,
கோபிசெட்டிபாளையம் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

பெறுதல்
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
கோபிசெட்டிபாளையம்.

பொருள் : மனைப்பிரிவு - ஈரோடு மாவட்டம் - கோபிசெட்டிபாளையம் வட்டம் - பாரியூர் ஊராட்சி - பாரியூர் கிராமம் - க.ச.எண்கள் : 91/1B, 91/1C ல் 2.05 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தில் மனைப்பிரிவு வரைபடத்திற்கு விற்பனை செய்ய உத்திரவு வழங்குதல் - சார்பாக.

பார்வை :
1. ஈரோடு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் ந.க.எண். LCQQC20B/2024/TCP, நாள் 24.02.24 & 06.03.24.
2. பாரியூர் ஊராட்சி தீர்மான எண் : 40/2024 நாள் :15.03.24
3. தலைவர், பாரியூர் ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள் நாள் :15.03.2024

பார்வை 1-ல் காணும் உத்திரவுப்படி கோபிசெட்டிபாளையம் வட்டம், பாரியூர் ஊராட்சி, பாரியூர் கிராமம், க.ச.எண்கள் : 91/1B, 91/1C ல் 2.05 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள **"ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகர்"** என்னும் பெயரிடப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. பார்வை 2 மற்றும் 3ல் காணும் ஊராட்சி மன்ற தீர்மானம், தலைவர் அவர்களின் உத்திரவின்படி மேற்படி மனைப்பிரில் 33 மனையிடங்கள் விற்பனை செய்து கொள்ள மனுதாரருக்கு அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி மனை இடங்கள் தனிநபர்களுக்கு கிரையம் செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இணைப்பு : 1. வரைபட நகல்
2. தீர்மான நகல்

C. Lila
தலைவர்,
பாரியூர் ஊராட்சி,
கோபி ஊராட்சி ஒன்றியம்.

நகல் :

1. திரு எம்.பி. ஆறுமுகம் மற்றும் 2 நபர்கள், 384 தொலைபேசி நகர், குள்ளம்பாளையம், கோபி - 638 476
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு.

பாரியூர் ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி. C. கிருபா

நாள் : 15.03.2024

பொருள் : மனைப்பிரிவு அனுமதி - பாரியூர் ஊராட்சி - பாரியூர் கிராமம் - க.ச.எண்கள் : 91/1B, 91/1C ல் 2.05 ஏக்கர் பரப்பில் (உத்தேச) குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் அனுப்பப்பட்டது - ஒப்புதல் வழங்கப்பட்டது -மனைப்பிரிவுகள் விற்பனை செய்ய உள்ளாட்சித் தீர்மானம் மூலம் அனுமதி வழங்கி உத்தரவிடுதல் - சார்பாக.

பார்வை :

1) திரு. எம்.பி. ஆறுமுகம் மற்றும் 2 நபர்கள், 384 தொலைபேசி நகர், குள்ளம்பாளையம், கோபிசெட்டிபாளையம் - 638 476 என்பவரின் விண்ணப்பம். 30.01.2024
2) கோபிசெட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்கள் 691/2024, மற்றும் 692/2024 நாள் : 29.02.2024.
3) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ஈரோடு மண்டலம் அவர்களின் ந.க.எண் : LCQQC20B/2024/TCP, நாள் 24.02.24 & 06.03.24.
4) இவ்ஊராட்சி மன்ற தீர்மான எண்: 40/2024 நாள் : 15.03.2024.

*****

உத்திரவு

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், பாரியூர் ஊராட்சி, பாரியூர் கிராமம், க.ச.எண்கள் : 91/1B, 91/1C ல் 2.05 ஏக்கர் பரப்பளவில் பார்வை1ல் காணும் திரு. எம்.பி. ஆறுமுகம் மற்றும் 2 நபர்கள், 384 தொலைபேசி நகர், குள்ளம்பாளையம், கோபிசெட்டிபாளையம் என்பவரின் விண்ணப்பத்தின் பேரில் பார்வை 2ல் காணும் கோபிசெட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவணங்களின் படி மேற்படி விண்ணப்பதாரால் மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள், பொது உபயோகம், பூங்கா இடம் மற்றும் மின்பகிர்மானத்திற்கான இடத்தை பாரியூர் ஊராட்சி தலைவர் பெயருக்கு தானப்பத்திரம் செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. பார்வை 3ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு மண்டலம் அவர்களின் கடிதத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வரைபடம் ஒப்புதல் வழங்கி மனைப்பிரிவிற்கு DTCP அங்கீகார எண் **55/2024** என எண்ணிட்ட வரைபடம் நிபந்தனைகளுடன் 33 மனையிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 4ல் காணும் இவ்ஊராட்சி மன்ற தீர்மானத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு மண்டலம் அவர்களால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ஈரோடு மண்டலம் அவர்கள் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு **"ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகர்"** என்னும் பெயரிடப்பட்ட 33 மனையிடங்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

C. Kiruba

தலைவர்,
பாரியூர் ஊராட்சி,
கோபி ஊராட்சி ஒன்றியம்.

இணைப்பு : 1) நிபந்தனைகள்
2) வரைபடம் -1

பெறுதல் :

திரு. எம்.பி. ஆறுமுகம் மற்றும் 2 நபர்கள், 384 தொலைபேசி நகர், குள்ளம்பாளையம்,
கோபிசெட்டிபாளையம் - 638 476

நகல் : 1) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2) சார்பதிவாளர், கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு தகவலுக்காக.

ஈரோடு மாவட்டம் - கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியம்

பாரியூர் ஊராட்சி

தீர்மான நகல்

2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பாரியூர் ஊராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள்.

கூட்டத் தலைவர் : திருமதி. C. கிருபா அவர்கள்,

வருகை தந்த தலைவர் உட்பட 10 வருகை தந்த அங்கத்தினர்கள் 9

பொருள் எண் : 3	தீர்மான எண் : 40
ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், பாரியூர் ஊராட்சி, பாரியூர் கிராமம், க.ச.எண்கள் : 91/1B, 91/1C ல் 2.05 ஏக்கர் பரப்பில் திரு. எம்.பி. ஆறுமுகம் மற்றும் 2 நபர்கள், 384 தொலைபேசி நகர், குள்ளம்பாளையம், கோபிசெட்டிபாளையம் என்பவரால் அமைத்துள்ள மனைப்பிரிவிற்கு ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் (பொ) அவர்கள் ந.க.எண்: LCQQC20B/2024/TCP, நாள் 24.02.24 & 06.03.24 தொழில்நுட்ப அனுமதி வழங்கியும் மேற்படி மனைப்பிரிவின் வரைபடத்திற்கு DTCP அங்கீகார எண் 55/2024 என எண்ணிடப்பட்ட **"ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகர்"**மனைப் பிரிவிற்க்கு ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துறையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி அங்கீகாரம் வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு	தீர்மானம் எண் : 40/2024 அங்கீகரிக்கப்படுகிறது.

(உண்மை நகல்)

C. Kiruba

தலைவர்,
பாரியூர் ஊராட்சி,
கோபி ஊராட்சி ஒன்றியம்.